**22.01.2026.**

**O.S.No.111/2001**

**வா.சா.2 : பெரியசாமி**

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-

2) எனது நிருபண வாக்குமூலம் நான் ஒரு வழக்கிற்கு தான் தாக்கல் செய்துள்ளேன். நான் முதலில் கிழங்கு வியாபாரம் செய்து கொண்டு இருந்தேன். வாதி மற்றும் பிரதிவாதிகள் காட்டில் உள்ள கிழங்கை நான் தான் எடுத்து வியாபாரம் செய்தேன் என்றால் சரிதான். வாதி பிரதிவாதிகளுக்கு விவசாயம் நிலம் இரண்டு கிராமங்களிலும் மற்றும் ஒரு வீடு இருந்தது என்றால் சரிதான். தென்னங்குடிபாளையத்திலும் அப்பம்மசமுத்திரத்திலும் விவசாய் நிலம் இருந்தது. வீடு ஆத்தூர் டவுணில் உள்ளது. சின்னப்பிள்ளை அம்மாளுக்கு 4 மகன்கள் மட்டும் தான். வேறு பெண் பிள்ளைகள் இல்லை.

3) விவசாயம் செய்து கொண்டு இருக்கும்போது வாதி பிரதிவாதிகள் ஒரே குடும்பமாக இருந்தனர் என்றால் சரிதான். வாதி பிரதிவாதிகள் எந்த கிராமத்தில் இருந்த வீட்டில் வசித்தனர் என்றால் தென்னங்குடிபாளையத்தில் இருந்த காட்டில் இருந்த கொட்டாயில் தான் பால் மாடுகளை வைத்து கொண்டு வசித்து வந்தனர். தென்னங்குடிபாளையம் மற்றும் அப்பம்மசமுத்திரத்தில் இருந்த நிலம் அவர்களது பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். சின்னப்பிள்ளையின் கணவர் பெயர் பெருமாள் படையாச்சி. மேற்படி நபர் இறந்து சுமார் 30 வருடத்திற்கு மேல் இருக்கும். சின்னப்பிள்ளை படிக்காதவர் மற்றும் வீட்டில் சமையல் வேலை செய்து கொண்டிருப்பார். காட்டில் விவசாயம் மற்றும் மாடுகளை பார்த்து வந்தார்.

4) சின்னப்பிள்ளை, கணவர் மற்றும் அவருடைய மகன்கள் ஆகியோர் ஒன்றாக தான் இருந்து பால் மாடுகளை வைத்து விவசாய நிலங்களை பராமரித்து வந்தார்கள் என்றால் சரிதான். ஆத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு எதிரே இருந்த மனையை நான் தான் முன்னிருந்து வாங்கி கொடுத்தேன் என்றால் சரிதான். நில புரோக்கர் வேலையும் செய்து வந்தேன். அதற்கு பின்னிட்டு மேற்படி ஆத்தூர் மனையை

சொசைட்டியில் கடன் வாங்கி தான் வீடு சின்னப்பிள்ளை கட்டினார் என்றால் சரிதான். சின்னப்பிள்ளையின் மகன்களும் கடன் பத்திரத்தில் கையெழுத்து போட்டு கொடுத்தனர் என்றால் சரிதான். மேற்படி சொத்து வாங்கி வீடு கட்டும் போது 4 மகன்களும் 20 வயதை கடந்த பெரிய மகன்கள் தான். வீடு கட்டிய விவரம் மட்டும் தான் தெரியும். நான் காலி மனை மட்டுமே வாங்கி கொடுத்தேன். சின்னப்பிள்ளையின் குடும்ப பத்திரங்களில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்று ஞாபகம் இல்லை. எனது நிருபண வாக்குமூலம் தட்டச்சு செய்யும் போது எத்தனை குடும்ப பத்திரங்களில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்று ஞாபகம் இல்லை. என்னை கேட்கவும் இல்லை நான் சொல்லவும் இல்லை. சின்னபிள்ளை நிலம் வாங்கும் போது நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். என்னுடன் சாட்சி கையெழுத்து போட்டது யார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

5) மேற்படி பத்திரம் எப்போது எழுதப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எத்தனை வருடத்திற்கு முன்பு எழுதினார்கள் என்று ஞாபகம் இல்லை. சின்னப்பிள்ளை எழுதிய பத்திரம் தவறாக உள்ளது என்று பிழைத்திருத்த பத்திரம் எழுதினார்கள் என்றால் சரிதான். அதிலும் நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். எனது கையெழுத்தை பார்த்தால் என்னால் சொல்ல முடியும். 27.07.2001-ம் தேதிய என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் பத்திரம் என்ன பத்திரம் என்று எனக்கு தெரியவில்லை. சிவானந்தம் என்பவருக்கு எழுதி வைத்த பத்திரத்தை ரத்து செய்வதற்கு நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான்.

6) மேற்படி ஆவணம் ஏற்கனவே வா.சா.ஆ.2 ஆக வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பத்திரத்தில் அசல் ஆவணத்தில் நகலில் உள்ள கையெழுத்து சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பத்திரம் சிவானந்தம் என்பவருக்கு எழுதி வைத்த பத்திரத்தை ரத்து செய்வதற்காக தான் எழுதப்பட்டது என்றால் அது எனக்கு ஞாபகம்

இல்லை. ரங்கநாதன் என்பவருக்கு எழுதி வைத்த சொத்தை சின்னப்பிள்ளை ரத்து செய்து விட்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது. ரத்து செய்ததற்கு பின்னிட்டு தான் சிவாநந்தம் பெயரில் சின்னபிள்ளை ஒரு பத்திரம் எழுதி வைத்தார் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி ஆவணத்தை ரத்து செய்ததால் தான் சிவானந்தம் பெயருக்கு எழுதி வைக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

7) அதை மீண்டும் சிவானந்தம் பெயரில் இருந்து ரத்து செய்துவிட்டார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சின்னப்பிள்ளை என்பவர் எழுதி வைத்த பத்திரங்களை அவரே ரத்து செய்து விட்டதால் அந்த சொத்து யார் பெயரிலும் இல்லை என்றும் சின்னப்பிள்ளை பெயரில் தான் தற்போது வரை இருந்து வருகிறது என்று சொன்னால் எனக்கு தெரியாது.  ஞாபகம் இல்லை. மேற்படி சொத்துக்கள் சின்னப்பிள்ளை என்பவர் என்பவர் எழுதி வைத்த பத்திரங்களை அவரே ரத்து செய்து விட்டதால் சொத்துக்கள் அனைத்தும் சின்னப்பிள்ளை இறப்புக்கு பின்னிட்டு சின்னப்பிள்ளையின் மகன்களுக்கு மட்டுமே சமமாக பாத்தியப்பட்டது என்று சொன்னால் தெரியாது. கிராமத்தில் இருந்த விவசாய நிலங்களுக்கு நடந்த வழக்கிற்கு நானும் வந்து சாட்சி சொன்னேன் என்றால் சரிதான். அந்த சாட்சியத்தில் நான்கு மகன்களுக்கும் பாகம் உள்ளது என்று சொல்லி உள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை.

**9 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

8) நான் நிலம் வியாபாரம் செய்துள்ளேள் என்றும் அதனால் பத்திரத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்று சொன்னால் நான் படிக்காதவன். பத்திரத்தில் உள்ள சொத்து விவரம் தவறு என்றால் அந்த பத்திரமே தவறு என்றால் சரிதான். நான் சொல்வதுபோல 1983 ம் வருடம் 1500 ச.அடி காலி மனையை சின்னப்பிள்ளைக்கு கிரயம் வாங்கி தந்ததாக சொல்லும் விவரம் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து விவரத்தை பற்றி எனக்கு எதுவுமே தெரியாது என்றும் வழக்கு என்ன பரிகாரத்திற்கு போட்டுள்ளார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது. நான் பிழைத்திருத்த பத்திரத்திற்கு சாட்சி கையெழுத்து போட்டும் பொய்யாக

தயாரிக்கப்பட்டுள்ள பத்திரத்தில் நான் கையெழுத்து போட்டும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9) வழக்கு சொத்தில் வாதி அனுபவத்தில் இருந்ததில்லை என்றால் எனக்கு தெரியாது. வாதி தாவா சொத்தில் அனுபவத்திலும் இல்லை குடியும் இல்லை என்றும் வழக்கு சொத்தில் எவ்விதமான வரியும் கட்டவில்லை என்றும் சொத்தை பற்றி எவ்வித விவரமும் தெரியாது என்றும் நான் வாதி கேட்டுகொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிழங்கு வியாபாரம் சம்பந்தமாக எனக்கும் 9 பிரதிவாதிக்கும் மனக்கசப்பு இருப்பதால் 9 பிரதிவாதிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையயை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் சட்டப்படி ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**8,10 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

10) தர்மலிங்கம் என்பவர் இறந்துவிட்டார். அவர் மனைவி பெயர் ராஜாத்தி என்றால் பெயர் தெரியாது. அவர்களுக்கு சொந்தமாக தென்னங்குடிபாளையத்தில் நிலம் உள்ளது என்றால் சரிதான். அந்த நிலம் சம்மந்தமாக அசல் வழக்கு எண்ணில் 95/2003 சாட்சி சொன்னேன் என்றால் சரிதான். அதில் 4 பேருக்கும் சரி சமமாக பாகம் உள்ளது என்று தீர்ப்பாகி உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சின்னப்பிள்ளை மற்றும் பெருமாள் படையாச்சி இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனவே மேற்படி குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களில் தர்மலிங்கம் வகையறாவுக்கு 1/4 பாகம் உள்ளது என்றால் தெரியாது. நான் ரங்கநாதனுக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.01.22 17:48:47 +0530

**Subordinate Judge, Attur.**